# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2384/35 - 2024 මැයි මස 17 වැනි සිකුරාදා - 2024.05.17

*2384/35 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டம்***

*1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்கம் கொண்ட சட்டங்கள் மூலம் திருத்தி அமைக்கப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவு மற்றும் 14 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆவது பிரிவின் கீழ் நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சராகிய ரணில் விக்கிரமசிங்க ஆகிய என்னால் பின்வரும் விதிமுறைகள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன.*

**ரணில் விக்கிரமசிங்க,**
*நிதி,பொருளாதார நிலைபேறு மற்றும் தேசியக்*
*கொள்கைகள் அமைச்சர்.*

*நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு,*
*கொழும்பு 01.*
*2024 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆந் திகதி.*

**ஒழுங்குவிதிகள்**

1. இவ் ஒழுங்குவிதிகள் **"1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் கீழான தரப்படுத்தலும் தரக்கட்டுப்பாடும் ஒழுங்குவிதிகள்"** என அழைக்கப்படும்.

2. 2018 மார்ச் மாதம் 29 ஆம் திகதிய 2064/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2017 ஆம் ஆண்டின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (தரப்படுத்தலும் தரக்கட்டுப்பாடும்) ஒழுங்குவிதிகள் மற்றும் அதன் திருத்தங்கள், 2024 மே மாதம் 16 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் இலங்கையின் எந்தவொரு துறைமுகம் / விமான நிலையத்திற்கு வந்தடைந்த இறக்குமதிப்

பொருட்களுக்கு பாதிப்பில்லாதவாறு இத்தால் நீக்கப்படுவதுடன், இவ் வர்த்தமானி மூலம் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகள் 2024 மே மாதம் 17 ஆம் அல்லது அதன் பின்னர் இலங்கையின் எந்தவொரு துறைமுகம் / விமான நிலையத்திற்கு வந்தடைந்த **I (அ) ஆம் அட்டவணையில்** குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை இறக்குமதி செய்வதற்கு மற்றும் 2024 நவம்பர் மாதம் 16 ஆம் திகதி அல்லது அதன் பின்னர் இலங்கையின் எந்தவொரு துறைமுகம் / விமான நிலையத்திற்கு வந்தடைந்த **I (ஆ) ஆம் அட்டவணையில்** குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் இறக்குமதிகளுக்கு பொருந்தும்.

3. இங்கு **I (அ) மற்றும் I (ஆ) ஆம் அட்டவணைகளில்** குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள், குறித்த **I (அ) மற்றும் I (ஆ) அட்டவணைகளில்** IV ஆவது நிரலில் காட்டப்பட்டுள்ள "இலங்கை தரநிலைகளுக்கு" இணங்கவில்லையெனின், எந்த இறக்குமதியாளர்களும் அப் பொருட்களை இறக்குமதி செய்யக் கூடாது.

4. கீழே ஒழுங்குவிதி இலக்கம் 5 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் மூலமாக அல்லது கீழே ஒழுங்குவிதி இலக்கம் 6 இன் படி, இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் பரிசோதனை முடிவுகளை மதிப்பீடு செய்வதனூடாக "இலங்கை தரநிலைகளுக்கு" இணங்கியுள்ளதாக உறுதிப்படுத்தல் வேண்டும்.

5. இங்கு **I (அ) மற்றும் I (ஆ) ஆம் அட்டவணைகளில்** தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு பொருட்களையும் இறக்குமதி செய்யும் இறக்குமதியாளரினால், அவ் அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள உரிய "இலங்கை தரநிலைகளுக்கு" இணங்கியுள்ளமையை உறுதிப்படுத்துவதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேவையான ஆவணங்களை, இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

அ. அங்கீகாரம் பெற்ற சுயாதீன இரசாயனகூடமொன்று அல்லது சுயாதீன நிறுவனமொன்றினால் பெறப்பட்ட பொருட்களின் மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்ட பின்னர் பொருட்களை ஏற்றுமதி செய்கின்ற நாட்டில் அமைந்துள்ள அங்கீகாரம் பெற்ற சுயாதீன இரசாயனகூடமொன்றினால் வழங்கப்பட்ட பொருட்களுக்கு விதிக்கப்பட்டுள்ள "இலங்கை தரநிலைகளுக்கமைவாக" ஏற்றுக்கொள்ளக்கூடிய உற்பத்தி இணக்க சான்றிதழொன்று அல்லது;

ஆ. ஏற்றுமதி செய்கின்ற நாட்டின் தேசிய தர நிறுவனத்தினால் அல்லது தகுதி வாய்ந்த தர நிறுவனத்தினால் வழங்கப்பட்ட ஏற்றுக்கொள்ளக்கூடிய உற்பத்தி இணக்க சான்றிதழொன்று அல்லது;

இ. உரிய பொருட்களுக்கு இலங்கை கட்டளைகள் நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள வெளிநாட்டு உற்பத்தியாளரின் உற்பத்தி ஆலையிலிருந்து வழங்கப்பட்ட ஏற்றுக் கொள்ளக்கூடிய உற்பத்தி இணக்க சான்றிதழொன்று அல்லது;

ஈ. உரிய இலங்கை தரநிலை விவரக் குறிப்புகளுக்கு இணங்கும் தரநிலையொன்றை பயன்படுத்தி உறுதிப்படுத்தப்பட்ட வேறு எந்தவொரு "உற்பத்தி சான்றிதழ் குறியீடொன்று" அல்லது "எஸ்.எல்.எஸ் (SLS) குறியீட்டிற்கு" எந்தவொரு நாட்டினதும் தேசிய தரநிலைகள் நிறுவனத்தினால் வழங்கப்படும் சான்றிதழ் / உரிமம்.

6. **I (அ) மற்றும் I (ஆ) ஆம் அட்டவணைகளில்** குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு பொருளொன்றையும் இறக்குமதி செய்கின்ற அனைத்து இறக்குமதியாளர்களும், இலங்கை சுங்கத்தினால் பொருட்களை விடுவிப்பதற்கு முன்னர் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்கான அனைத்து ஆவணங்களையும் இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகம் மற்றும் இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.
உரிய "இலங்கை தர நிலைகளுக்கு" அமைவாக தேவையானவாறு மாதிரிகள் பரிசோதிக்கப்பட வேண்டும்.

7. மேலே ஒழுங்குவிதி 6 இன் படி, இலங்கை கட்டளைகள் நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட மாதிரிகள், இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தால் பரிந்துரைக்கப்பட்ட பொருத்தமான இணக்க மதிப்பீட்டு நடைமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களின் அடிப்படையில் இலங்கை தரநிலைகளுடன் இணங்குகிறதா என பரிசோதிக்கப்பட வேண்டும்.

8. பொது விதிகள்;

அ. "இலங்கை தரநிலைகளுக்கு" இணங்காத **அட்டவணை I (அ) மற்றும் I (ஆ)** இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு பொருளொன்றை இறக்குமதி செய்திருந்தால், அதனோடு தொடர்புபட்ட அனைத்து செலவுகளையும் அப் பொருளை இறக்குமதி செய்த இறக்குமதியாளரினால் ஏற்கப்பட்டு, சுங்க நுழைவுச்சீட்டில் (CUSDEC) குறிப்பிடப்பட்டுள்ள திகதியிலிருந்து தொண்ணூறு (90) நாட்களுக்குள் ஏற்றுமதி செய்த நாட்டிற்கு மீள் ஏற்றுமதி செய்யப்பட வேண்டும்.

ஆ. ஒழுங்குவிதி இலக்கம் 8 (அ) இன் பிரகாரம் மீள் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் விபரங்கள் உள்ளடங்கிய மாதாந்த அறிக்கையொன்று இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

இ. **I (அ) மற்றும் I (ஆ) அட்டவணைகளில்** குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு பொருளொன்றையும், விசேடமாக இலங்கை தரநிலைகளுக்கான 6 ஆம் ஒழுங்குவிதிக்கமைய மாதிரி பரிசோதனை செய்வதற்காக தடுத்து வைக்கப்படும் சந்தர்ப்பங்களில் அப் பொருட்களை விடுவிப்பதற்கு இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதி கிடைக்கும் வரை, இலங்கை சுங்கத்தினால் இறக்குமதியாளரின் எந்தவொரு களஞ்சியத்திற்கும் விடுவிக்கக் கூடாது.

ஈ. எவ்வாறாயினும், இலங்கை கட்டளை நிறுவனத்தின் “இலங்கை தரநிலைகளுக்கமைய” அப் பொருட்களின் வெளிப் பகுதியில் ஏதாவது குறியீடொன்றை வைப்பதன் கீழ், சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 134 ஆவது பிரிவின் படி இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் நிர்ணயிக்கப்படும் பெறுமதிக்கு சமமான வங்கி உத்தரவாதத்தின் கீழ் 03 நாட்களுக்குள் பொருட்களை இறக்குமதியாளரின் களஞ்சியத்திற்கு விடுவிக்க முடியும். அவ்வாறான சந்தர்ப்பத்தில், இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் இணக்கம் தொடர்பில் திருப்தியடைந்து எழுத்து மூலம் அறித்தால் மாத்திரமே அப்பொருட்களை களஞ்சியத்திலிருந்து விடுவிப்பதற்கு இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதி வழங்க முடியும். இல்லையெனின், ஒழுங்குவிதி இலக்கம் 8(அ) இன் படி அப் பொருட்களை இறக்குமதி செய்த நாட்டிற்கு மீள் ஏற்றுமதி செய்ய வேண்டும்.

உ. **I (அ) மற்றும் I (ஆ) அட்டவணைகளின்** III ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு பொருட்களுக்கும் இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் தேவையான அனுமதிகள் பெறப்பட்டுள்ளதாக இலங்கை சுங்கத்திலிருந்து பொருட்களை விடுவிப்பதற்கு முன்னர் உறுதிப்படுத்தல் வேண்டும்.

ஊ. **அட்டவணை I (அ)** இன் நிரல் III இன் தொடரிலக்கம் 01 முதல் 48 வரை மற்றும் **அட்டவணை I (ஆ)** இன் நிரல் III இன் தொடரிலக்கம் இலக்கம் 128 முதல் 131 வரை தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ள உணவுப் பொருட்களை இறக்குமதி செய்யும் போது, இலங்கை சுங்கத்திலிருந்து அவ்வாறான பொருட்களை விடுவிப்பதற்காக 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க திருத்தம் செய்யப்பட்ட உணவுச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதான உணவு தொடர்பான நிறுவனத்தின் அனுமதியும் இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியும் கட்டாயமானதாகும்.

9. அ. **அட்டவணை I (அ)** இன் III ஆம் நிரலின் தொடரிலக்கம் 49 முதல் 127 வரை மற்றும் **அட்டவணை I (ஆ)** இன் III ஆம் நிரலின் தொடரிலக்கம் 132 முதல் 161 வரை தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ள உணவல்லாத பொருட்களுக்கு இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் அனுமதி வழங்கவில்லையெனில்;

ஆ. **அட்டவணை I (அ)** இன் III ஆம் நிரலின் தொடரிலக்கம் 01 முதல் 48 வரை மற்றும் **அட்டவணை I (ஆ)** இன் III ஆம் நிரலின் தொடரிலக்கம் 128 முதல் 131 வரை தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ள உணவுப் பொருட்களுக்கு இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க உணவுச் சட்டம் மற்றும் அதன் திருத்தம் மூலம் குறிப்பிடப்பட்டுள்ள பிரதான உணவு நிறுவனம் அனுமதி வழங்கவில்லையெனில்;

எந்த இறக்குமதியாளரும் இவ் ஒழுங்குவிதிகளின் கீழ்வரும் பொருட்களை விற்பனை செய்தல், விற்பனை செய்வதற்கு முன்வைத்தல், பயன்படுத்தல் அல்லது விநியோகித்தல் கூடாது.

10. “இலங்கை தரநிலைகளுக்கு” இணங்காமை.

அ. மாதிரிப் பரிசோதனையின் முடிவாக **I (அ) மற்றும் I (ஆ) அட்டவணைகளில்** குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள், “இலங்கை தரநிலைகளுக்கு” இணங்கவில்லையென இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் கண்டறியப்பட்டால், அது சம்பந்தமாக இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு அறிவிக்க வேண்டும் என்பதுடன், இணக்க சான்றிதழை வழங்கிய அங்கீகாரம் பெற்ற இரசாயனகூடத்திற்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ஆ. இறக்குமதியாளரால் சமர்ப்பிக்கப்பட்ட சான்றிதழில், இவ் ஒழுங்குவிதிகளின் ஏதேனும் ஒரு நோக்கத்தை மீறும் வகையில் தவறான தகவல்கள் இருப்பது கண்டறியப்பட்டால், குறித்த சம்பவம் மற்றும் தவறான தகவல்கள் அடங்கிய குறித்த சான்றிதழுடன் இலங்கை கட்டளை நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகம் மற்றும் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்படல் வேண்டும். அவ்வாறான தவறான

தகவல்கள் அடங்கிய ஆவணத்தை (சான்றிதழ்) வழங்கிய இறக்குமதியாளருக்கு / தரப்பினருக்கு எதிராக இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 235) இன் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

11. இறக்குமதியாளரொருவர் இவ் ஒழுங்குவிதிகளின் நோக்கத்திற்கெதிராக ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை மீறும் வகையில் செயற்பட்டால், இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால், இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் சுங்கப் பணிப்பாளர் நாயகத்துடன் கலந்துரையாடி அவ் இறக்குமதியாளர் / தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

12. இவ் ஒழுங்குவிதிகளின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் சுங்கப் பணிப்பாளர் நாயகம், உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் ஏனைய உரிய நிறுவனங்களுக்கு **"செயற்பாட்டு ஆலோசனைகள்'** வழங்கப்படும்.

13. தேசிய பொருளாதாரத்தின் தேவையின் அடிப்படையில் மற்றும் பொது சுகாதார மற்றும் பாதுகாப்பு சம்பந்தமான விடயங்களின் அடிப்படையில் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு சுங்கப் பணிப்பாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்து சந்தர்ப்பத்திற்கேற்ப மேலே குறிப்பிடப்பட்ட எந்தவொரு ஒழுங்குவிதியொன்றையும் செயற்படுத்தாமல் இருக்க முடியும்.

**அட்டவணை I (அ)**

| தொடர் இல. | நிரல் *II*<br>இ.மு குறியீடு | நிரல் *III*<br>விபரம் | நிரல் *IV*<br>இலங்கை கட்டளைகள் |
|---|---|---|---|
| 1 | 0402.10<br>0402.21<br>0402.29 | முழு ஆடைப் பால்மா,குறைந்த கொழுப்பினைக் கொண்ட பால்மா மற்றும் கொழுப்பற்ற (ஆடை நீக்கிய) பால்மா | இ.க 731 பால்மாவிற்கான விபரக் கூற்று |
| 2 | 0402.99.10<br>0402.99.90 | கட்டிப்பால் | இ.க 179 இனிப்பூட்டப்பட்ட முழு ஆடைக் கட்டிப்பாலுக்கான விபரக்கூற்று |
| 3 | 0405.10 | பட்டர் | இ.க 279 பட்டருக்கான விபரக் கூற்று |
| 4 | 0405.20<br>0405.90 | பால் கொழுப்பு பரவல் பொருட்கள் | இ.க 1428 பால் கொழுப்பு பரவல் பொருட்களுக்கான விபரக் கூற்று |
| 5 | 0713.40.12 | சிவப்பு பருப்புகள் உடைக்கப்பட்டவை | இ.க 896 உடைக்கப்பட்ட சிவப்பு பருப்புகளுக்கான விபரக் கூற்று |
| 6 | 0910.30.10<br>0910.30.90 | முழு மஞ்சள் மற்றும் தூள் | இ.க 613 முழு மஞ்சள் மற்றும் தூள் தொடர்பிலான விபரக்கூற்று |
| 7 | 1507.10<br>1507.90 | சோயா அவரை எண்ணெய் | இ.க 293 சோயா அவரை எண்ணெய்க்கான விபரக் கூற்று |
| 8 | 1508.10<br>1508.90 | நிலக் கடலை எண்ணெய் (பீனட் ஒயில்) | இ.க 947 நிலக் கடலை எண்ணெய்க்கான விபரக் கூற்று |
| 9 | 1511.10<br>1511.90.20<br>1511.90.90 | தாவர எண்ணெய் (பாம் ஒயில்) | இ.க 720 தாவர எண்ணெய்க்கான விபரக் கூற்று |
| 10 | 1511.90.30<br>1511.90.90 | பாம் ஒலீன் | இ.க 961 பாம் ஒலீனிற்கான விபரக் கூற்று |
| 11 | 1511.90.10 | பாம் ஸ்டெரின் | இ.க 960 பாம் ஸ்டெரினிற்கான விபரக் கூற்று |

| தொடர் இல. | நிரல் II<br>இ.மு<br>குறியீடு | நிரல் III<br>விபரம் | நிரல் IV<br>இலங்கை கட்டளைகள் |
|---|---|---|---|
| 12 | 1512.11<br>1512.19 | சூரியகாந்தி விதை எண்ணெய் | இ.க 946 சூரியகாந்தி விதை எண்ணெய்க்கான விபரக் கூற்று |
| 13 | 1513.11.11<br>1513.11.19<br>1513.11.21<br>1513.11.29<br>1513.19.10<br>1513.19.90 | தேங்காய் எண்ணெய் | இ.க 32 தேங்காய் எண்ணெய்க்கான விபரக் கூற்று |
| 14 | 1513.21<br>1513.29 | தாலாம் பருப்பு எண்ணெய் | இ.க 862 தாலாம் பருப்பு எண்ணெய்க்கான விபரக் கூற்று |
| 15 | 1513.21<br>1513.29 | தாலாம் பருப்பு ஒலீன் | இ.க 1555 தாலாம் பருப்பு ஒலீன் விபரக் கூற்று |
| 16 | 1515.21<br>1515.29 | சோள (தானிய) எண்ணெய் | இ.க 905 சோள (தானிய) எண்ணெய்க்கான விபரக் கூற்று |
| 17 | 1515.50 | நல்லெண்ணெய் | இ.க 231 நல்லெண்ணெய்க்கான விபரக் கூற்று |
| 18 | 1517.10.30<br>1517.10.90<br>1517.90 | மாஜரின் ,கொழுப்பு பரப்பப்பட்டவை மற்றும் கலக்கப்பட்ட கொழுப்பு பரப்பப்பட்ட வெதுப்பக பண்டங்கள் | இ.க 1427 கொழுப்பு பரப்பப்பட்ட மற்றும் கலக்கப்பட்ட கொழுப்பு பரப்பப்பட்ட வெதுப்பக பண்டங்களிற்கான விபரக் கூற்று |
| 19 | 1604.11<br>1604.12<br>1604.13<br>1604.14<br>1604.15<br>1604.16<br>1604.19 | தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் | இ.க 591 தகரத்தில் அடைக்கப்பட்ட மீனிற்கான விபரக் கூற்று |
| 20 | 1604.20 | தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் கறி | இ.க 1106 தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் கறிக்கான விபரக் கூற்று |
| 21 | 1701.12.10<br>1701.12.90<br>1701.13<br>1701.14.10<br>1701.14.90<br>1701.91.30<br>1701.91.90<br>1701.99.90 | சிவப்பு சீனி | இ.க 883 சிவப்பு சீனிக்கான விபரக் கூற்று |
| 22 | 1701.91.10<br>1701.91.20<br>1701.99.10<br>1701.99.20<br>1701.99.30<br>1701.99.40<br>1701.99.90 | வெள்ளை சீனி மற்றும் ஐசிங் சுகர் | இ.க 191 வெள்ளை சீனிக்கான விபரக் கூற்று |

| தொடர் இல. | நிரல் *II*<br>இ.மு<br>குறியீடு | நிரல் *III*<br>விபரம் | நிரல் *IV*<br>இலங்கை கட்டளைகள் |
|---|---|---|---|
| 23 | 1704.10.10<br>1704.10.90 | சுவிங்கம் மற்றும் பபிள்கம் | இ.க 1265 சுவிங்கம் மற்றும் பபிள்கம்களுக்கான விபரக் கூற்று |
| 24 | 1704.90.10<br>1704.90.90 | மென்மையான மிட்டாய்கள் | இ.க 1575 மென்மையான மிட்டாய்களுக்கான விபரக் கூற்று |
| 25 | 1704.90.10<br>1704.90.90 | வன்மையான மிட்டாய்கள் | இ.க 1576 வன்மையான மிட்டாய்களுக்கான விபரக் கூற்று |
| 26 | 1902.11<br>1902.19<br>1902.20<br>1902.30 | நூடில்ஸ்,உடன் தயாரிப்பு நூடில்ஸ் மெகரோனி, ஸ்பெஹெட்டி மற்றும் வேர்மிஸெலி (சேமியா) | இ.க 420 பெஸ்டா உற்பத்திகளுக்கான விபரக்கூற்று<br><br>இ.க 1534 உடன் தயாரிப்பு நூடில்ஸ் உற்பத்திகளுக்கான விபரக் கூற்று |
| 27 | 1902.11<br>1902.19<br>1902.20<br>1902.30 | அரிசி நூடில்ஸ் (அரிசிசேமியா) | இ.க 858 அரிசி நூடில்ஸ்களுக்கான (அரிசிசேமியா) விபரக் கூற்று |
| 28 | 1905.31.10<br>1905.31.90 | பிஸ்கட்டுகளும் குக்கீஸ்களும் | இ.க 251 பிஸ்கட்டுகளும் குக்கீஸ்களுக்குமான விபரக் கூற்று |
| 29 | 1905.32.10<br>1905.32.90 | வேபர்ஸ்கள் | இ.க 1313 வேபர்ஸ்களுக்கான விபரக் கூற்று |
| 30 | 2006.00.10<br>2006.00.90<br>2008.20 | பேணிகளில் அடைக்கப்பட்ட அன்னாசிப்பழம் | இ.க 266 பேணிகளில் அடைக்கப்பட்ட அன்னாசிப் பழங்களுக்கான விபரக்கூற்று |
| 31 | 2007.10<br>2007.91<br>2007.99 | ஜாம்கள், ஜெலிகள், மார்மலேட்டுகள் மற்றும் பதப்பொருட்கள் | இ.க 265 ஜாம்கள், ஜெலிகள்,மார்மலேட்டுகள் மற்றும் பதப்பொருட்களான விபரக் கூற்று |
| 32 | 2008.99.90 | பேணிகளில் அடைக்கப்பட்ட மாம்பழம் | இ.க 536 பேணிகளில் அடைக்கப்பட்ட மாம்பழங்களுக்கான விபரக் கூற்று |
| 33 | 2009.11.10<br>2009.11.90<br>2009.19<br>2009.29<br>2009.39<br>2009.49<br>2009.50<br>2009.69<br>2009.79<br>2009.81<br>2009.89.10<br>2009.89.90<br>2009.90 | செறிவுடைய பழச்சாறுகள்,<br>செறிவுடைய பழப்பாகுகள்<br>செறிவுடைய பழத்தீம்பான திரட்டுகள் | இ.க 730 செறிவான பழச்சாறு திரட்டுகள், பழப்பாகு திரட்டுகள் மற்றும் பழத்தீம்பான திரட்டுகளுக்கான விபரக்கூற்று |

| தொடர் இல. | நிரல் *II* இ.மு குறியீடு | நிரல் *III* விபரம் | நிரல் *IV* இலங்கை கட்டளைகள் |
|---|---|---|---|
| 34 | 2009.12<br>2009.21<br>2009.31<br>2009.41<br>2009.50<br>2009.61<br>2009.71<br>2009.81<br>2009.89.10<br>2009.89.90<br>2009.90 | செறிவான பழரசங்கள் மற்றும் அமிர்தங்கள் | இ.க 1328 செறிவான பழரசங்கள் மற்றும் அமிர்தங்களுக்கான விபரக்கூற்று |
| 35 | 2009.19<br>2009.29<br>2009.39<br>2009.49<br>2009.50<br>2009.61<br>2009.69<br>2009.79<br>2009.81<br>2009.89.10<br>2009.90 | பழச்சாறுகள்,<br>பழப்பாகுகள்<br>பழத்தீம்பான திரட்டுகள் | இ.க 214 பழச்சாறுகள்,பழப்பாகுகள் மற்றும் பழத்தீம்பானங்களுக்கான விபரக்கூற்று |
| 36 | 2103.10 | சோயாசோஸ் | இ.க 1035 சோயா சோஸுக்கான விபரக்கூற்று |
| 37 | 2103.20 | தக்காளிசோஸ் மற்றும் கெட்சப் | இ.க 260 தக்காளிசோஸ் மற்றும் கெட்சப்களுக்கான விபரக்கூற்று |
| 38 | 2103.90.90 | மிளகாய் சோஸ் | இ.க 581 மிளகாய் சோஸ்களுக்கான விபரக்கூற்று |
| 39 | 2105.00 | ஐஸ் கிறீம் | இ.க 223 ஐஸ் கிறீமிற்கான விபரக்கூற்று |
| 40 | 2105.00 | குளிரால் ஊறையச் செய்யப்பட்ட இனிப்புப் பண்டங்கள், பானங்கள் | இ.க 967 குளிரால் உறையச் செய்யப்பட்ட இனிப்புப் பண்டங்கள், பானங்களுக்கான விபரக்கூற்று |
| 41 | 2202.99.61<br>2202.99.69 | பால் சேர்க்கப்பட்ட பானங்கள் | இ.க 917 பால் சேர்க்கப்பட்ட பானங்களுக்கான விபரக்கூற்று |
| 42 | 2106.90.49<br>2202.10<br>2202.99.30<br>2202.99.40<br>2202.99.91<br>2202.99.99 | காபனேற்றப்படாத செயற்கை முறையில் நிறமூட்டப்பட்ட கோடியல்கள் மற்றும் குளிர்பானங்கள் | இ.க 221 காபனேற்றப்படாத செயற்கை முறையில் நிறமூட்டப்பட்ட கோடியல்கள் மற்றும் குளிர்பானங்களுக்கான விபரக்கூற்று |

| தொடர் இல. | நிரல் *II* இ.மு குறியீடு | நிரல் *III* விபரம் | நிரல் *IV* இலங்கை கட்டளைகள் |
|---|---|---|---|
| 43 | 2106.90.49<br>2202.10<br>2202.99.30<br>2202.99.51<br>2202.99.59<br>2202.99.70<br>2202.99.91<br>2202.99.99 | தயார் நிலைப் பழப்பானங்கள் | இ.க 729 தயார்நிலைப் பழப்பானங்களுக்கான விபரக்கூற்று |
| 44 | 2201.10.10 | போத்தலில் அடைக்கப்பட்ட இயற்கைக் கனிப்பொருள் நீர் | இ.க 1038 போத்தலில் அடைக்கப்பட்ட இயற்கைக் கனிப்பொருள் குடிநீரிற்கான விபரக்கூற்று |
| 45 | 2201.90.10 | போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர் | இ.க 894 பொதி செய்யப்பட்ட (போத்தலில் அடைக்கப்பட்ட) குடிநீரிற்கான விபரக்கூற்று |
| 46 | 2202.10<br>2202.99.30<br>2202.99.91<br>2202.99.99 | 1.நிறமூட்டப்பட்ட மற்றும் இனிப்பூட்டப்பட்டதும் காபனேற்றப்பட்டதுமான குடிபானங்கள்<br>2.காபனேற்றப்பட்ட நீர் மற்றும் அனுமதிக்கப்பட்ட நிறங்களைக் கொண்ட அல்லது கொண்டிராத சோடாநீர்<br>3.மணமூட்டப்பட்டதும் கோப்பியிடப்பட்டதுமான குடிபானங்கள் | இ.க 183 காபனேற்றப்பட்ட குடிபானங்களுக்கான விபரக்கூற்று |
| 47 | 2501.00 | உணவு தரத்திலான உப்பு (தானியம் போன்ற வடிவிலானவை) | இ.க 79 உணவுதரத்திலான உப்புகளுக்கான (தானியம் போன்ற வடிவிலானவை) விபரக்கூற்று |
| 48 | 2501.00 | உணவு தரத்திலானஉப்பு (தூள் போன்ற வடிவிலானவை) | இ.க 80 உணவு தரத்திலான உப்புகளுக்கான (தூள் போன்ற வடிவிலானவை) விபரக்கூற்று |
| 49 | 2523.29.20<br>2523.29.30 | சாதாரணபோட்லண்ட் சீமெந்து | இ.க 107 சாதாரணபோட்லண்ட் சீமெந்திற்கான விபரக்கூற்று |
| 50 | 2523.29.20<br>2523.29.30 | போட்லேண்ட் சுண்ணாம்புக் கல் சீமெந்து | இ.க 1253 போட்லேண்ட் சுண்ணாம்புக் கல் சீமெந்திற்கான விபரக் கூற்று |
| 51 | 2523.29.20<br>2523.29.30 | கல் கட்டடசீமெந்து | இ.க 515 கல் கட்டட சீமெந்துக்கான விபரக் கூற்று |
| 52 | 2523.29.20<br>2523.29.30 | கலந்தஹைற்றொலிக் சீமெந்து | இ.க 1247 கலந்தஹைற்றொலிக் சீமெந்திற்கான விபரக்கூற்று |
| 53 | 2711.19.10 | திரவமாக்கப்பட்ட பெற்றோலியவாயு | இ.க 712திரவமாக்கப்பட்ட பெற்றோலிய வாயுக்கான விபரக்கூற்று |
| 54 | 3303.00.21 | குழந்தைகளுக்கான கொலோன் | இ.க 589 குழந்தைகளுக்கான கொலோன் தொடர்பிலானவிபரக்கூற்று |
| 55 | 3304.91.00 | குழந்தைகளுக்கானசருமபவுடர் | இ.க187குழந்தைகளுக்கான சருமபவுடர் தொடர்பிலான விபரக்கூற்று |
| 56 | 3306.10 | பற்பசை | இ.க 275 பற்பசை தொடர்பிலான விபரக்கூற்று |

| தொடர் இல. | நிரல் *II* இ.மு குறியீடு | நிரல் *III* விபரம் | நிரல் *IV* இலங்கை கட்டளைகள் |
|---|---|---|---|
| 57 | 3401.11.30 | குழந்தைகளுக்கான சவர்க்காரம் | இ.க 547 குழந்தைகளுக்கான சவர்க்காரம் தொடர்பிலான விபரக்கூற்று |
| 58 | 3401.11.30<br>3401.11.90 | குளியலறை சவர்க்காரம் | இ.க 34 குளியலறை சவர்க்காரம் தொடர்பிலான விபரக்கூற்று |
| 59 | 3401.11.90 | குளிக்கும் போதுபாவிக்கப்படும் சவர்க்காரம் | இ.க 1220 குளிக்கும் போது பாவிக்கப்படும் சவர்க்காரம் தொடர்பிலான விபரக்கூற்று |
| 60 | 3401.19.30<br>3401.19.90 | சலவைச் சவர்க்காரம் | இ.க 554 சலவைச் சவர்க்காரம் தொடர்பிலான விபரக்கூற்று |
| 61 | 3401.20.90 | சலவைசெய்யும் சவர்க்கார பவுடர், பனித்துகள் மற்றும் துணுக்குகள் | இ.க 38 சலவை செய்யும் சவர்க்கார பவுடர், பனித்துகள் மற்றும் துணுக்குகள் தொடர்பிலான விபரக்கூற்று |
| 62 | 3402.50<br>3402.90.10 | செயற்கையான சலவை அழுக்கு நீக்கும் பவுடர் | இ.க 760 செயற்கையான சலவை அழுக்கு நீக்கும் பவுடர் தொடர்பிலான விபரக்கூற்று |
| 63 | 3605.00 | தீப்பெட்டி | இ.க 11 தீப்பெட்டி தொடர்பிலான விபரக்கூற்று |
| 64 | 3808.59.10<br>3808.61.10<br>3808.62.10<br>3808.69.10<br>3808.91.10 | நுளம்புச்சுருள் | இ.க 453 நுளம்புச்சுருள் தொடர்பிலான விபரக்கூற்று |
| 65 | 3808.59.91<br>3808.61.20<br>3808.62.20<br>3808.69.90<br>3808.91.30<br>3808.91.90 | நுளம்புபாய்கள் | இ.க 930 நுளம்புபாய்கள் தொடர்பிலான விபரக்கூற்று |
| 66 | 3916.10<br>3916.20<br>3916.90<br>3926.90.99 | காப்பீடு செய்யப்பட்ட ட்ரங்கிங் கேபிள் (கேசிங்) | இ.க 1206 காப்பீடு செய்யப்பட்ட ட்ரங்கிங் கேபிள் (கேசிங்) தொடர்பிலான விபரக்கூற்று |
| 67 | 3916.10<br>3916.20<br>3917.23<br>3917.32<br>3917.39.90<br>3917.40 | மின்சார நிறுவலுக்கான வாய்காற் குழல்கள் | இ.க 993 வடம் (கேபிள்) முகாமைக்கான குழாய் முறைகள் தொடர்பிலான விபரக்கூற்று<br>பகுதி 1 பொதுதேவைப்பாடுகள்<br>பகுதி 2 நெகிழ்வற்றகுழாய் முறைகள்<br>பகுதி 3 நெகிழ்வுடையகுழாய் முறைகள்<br>பகுதி 4 வளையும் தன்மையுடைய குழாய் முறைகள் |

| தொடர் இல. | நிரல் II இ.மு குறியீடு | நிரல் III விபரம் | நிரல் IV இலங்கை கட்டளைகள் |
|---|---|---|---|
| 68 | 3917.23 | நீர்வழங்கல் மற்றும் பூமியில் புதைப்பதற்கான மற்றும் அத்தகைய வடிகால்,கழிவுநீரினை அதிக வசையுடன் அமுத்தும் (பிளாஸ்டிக் தன்மையற்ற பொலிவைனைல் குளோரைட்) பீ.வீ.சீ - யு குழாய்கள் | இ.க 147 நீர்வழங்கல் மற்றும் பூமியில் புதைப்பதற்கான மற்றும் அத்தகைய வடிகால்,கழிவு நீரினை அதிகவிசையுடன் அமுத்தும் (பிளாஸ்டிக் தன்மையற்ற பொலிவைனைல் குளோரைட்) பீ.வீ.சீ - யு குழாய்கள் தொடர்பிலான விபரக்கூற்று |
| 69 | 3917.23 | கட்டிடத்தினுள் உள்ள மண் மற்றும் கழிவு அகற்றும் முறைமைக்கான பீவீசீ - யு குழாய்கள்(பிளாஸ்டிக் தன்மையற்ற பொலிவைனைல் குளோரைட்) | இ.க 1325 கட்டிடத்தினுள் உள்ள மண் மற்றும் கழிவு அகற்றும் முறைமைக்கான பீவீசீ - யு குழாய்கள்(பிளாஸ்டிக் தன்மையற்ற பொலிவைனைல் குளோரைட்) தொடர்பிலான விபரக்கூற்று |
| 70 | 3917.31.10<br>3917.39.10<br>4009.21.10<br>4009.22.10<br>4009.31.10<br>4009.32.10<br>4009.41.10<br>4009.42.10<br>8307.10.10<br>8307.90.10 | திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய வாயுவிற்கான குழாய்கள் மற்றும் குழாய்களின் வகைகள் | இ.க1171 திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய நீராவிவாயு மற்றும் எல்.பி.ஜி காற்று நிரப்ப பயன்படுத்தும் நெகிழ்வான இறப்பர் குழாய்கள் மற்றும் குழாய்களின் வகைகள் |
| 71 | 3917.40.90 | குடிக்கத்தக்க குளிர் நீர் வழங்கீட்டிற்கான (பிளாஸ்டிக் தன்மையற்ற பொலிவைனைல் குளோரைட்) பீ.வீ.சீ - யு குழாய் இணைப்புகள் மற்றும் துணைக்கருவிகள் | இ.க 659 குடிக்கத்தக்க குளிர் நீர் வழங்கீட்டிற்கான (பிளாஸ்டிக் தன்மையற்ற பொலிவைனைல் குளோரைட்) பீ.வீ.சீ - யு குழாய் இணைப்புகள் மற்றும் துணைக்கருவிகள் தொடர்பிலான விபரக்கூற்று. |
| 72 | 3917.40.90 | கட்டிடத்தினுள்ள மண் மற்றும் கழிவுஅகற்றும் முறைமைக்கான பீவீசீ- யு பொருந்துகைகள் (பிற்றிங்கஸ்) | இ.க 1325 கட்டிடத்தினுள்ள மண் மற்றும் கழிவு அகற்றும் முறைமைக்கான பீவீசீ - யு பொருந்துகைகள் (பிற்றிங்கஸ்)தொடர்பிலான விபரக்கூற்று. |
| 73 | 3925.10<br>3925.90 | பொலிஈதைலீன் நீர்சேமிப்புத் தாங்கிகள் | இ.க 1174 பொலிஈதைலீன் நீர்சேமிப்புத் தாங்கிகள் தொடர்பிலான விபரக்கூற்று. |
| 74 | 4011.40<br>4011.90.90 | மோட்டர்சைக்கிளினதும் ஸ்கூட்டரினதும் டயர்கள் | இ.க 890 மூலைவிட்ட பிளைமோட்டர் சைக்கிளினதும் ஸ்கூட்டரினதும் டயர்கள் தொடர்பிலான விபரக்கூற்று. |

| தொடர் இல. | நிரல் II இ.மு குறியீடு | நிரல் III விபரம் | நிரல் IV இலங்கை கட்டளைகள் |
|---|---|---|---|
| 75 | 4011.50 | துவிச்சக்கரவண்டிக்கான டயர்கள் | இ.க 224 துவிச்சக்கர வண்டிக்கான டயர்கள் தொடர்பிலான விபரக்கூற்று. |
| 76 | 4013.20 | துவிச்சக்கரவண்டிக்கான ரியுப்கள் | இ.க 127 துவிச்சக்கரவண்டிக்கான ரியுப்கள் தொடர்பிலான விபரக்கூற்று. |
| 77 | 4820.20 | அப்பியாசபுத்தகங்கள் | இ.க 382 அப்பியாச புத்தகங்கள் தொடர்பிலான விபரக்கூற்று. |
| 78 | 5204.11<br>5204.19<br>5204.20 | பருத்திதையல் நூல் | இ.க 112 பருத்திதையல் நூல் தொடர்பிலான விபரக்கூற்று. |
| 79 | 5508.10<br>5508.20 | நூற்கப்பட்ட பொலிஸ்டர் தையல் நூல் | இ.க 757 நூற்கப்பட்ட பொலிஸ்டர் தையல் நூல் தொடர்பிலான விபரக்கூற்று |
| 80 | 6506.10.20<br>6506.10.30 | வண்டி செலுத்துபவர்களுக்கான பாதுகாப்பு தலைக்கவசம் | இ.க 517 வண்டி செலுத்துபவர்களுக்கான பாதுகாப்புதலைக்கவசம் தொடர்பிலான விபரக்கூற்று |
| 81 | 6601.91<br>6601.99 | குடை (மடிக்கத்தக்கமற்றும் மடிக்க இயலாத) | இ.க 1207 குடை தொடர்பிலான விபரக்கூற்று<br>பகுதி 1 மடிக்க இயலாத குடை<br>பகுதி 2 மடிக்கத்தக்க குடை |
| 82 | 6810.11.90<br>6810.19 | சீமெந்திலான ஓடுகள் | இ.க 863 சீமெந்திலான கொங்றீட் ஓடுகள் தொடர்பிலான விபரக்கூற்று |
| 83 | 6811.40.10 | அஸ்பெஸ்டர் சீமெந்திலான நெளிவுசீட்டுகள் (Corrugated Sheet) | இ.க 9 அஸ்பெஸ்டர் சீமெந்திலான நெளிவுசீட்டுகள் தொடர்பிலான விபரக்கூற்று<br>பகுதி 2 நெளிவுசீட்டுகள் |
| 84 | 6811.40.20 | அஸ்பெஸ்டர் சீமெந்திலான தட்டையானசீட்டுக்ள் (Flat Sheet) | இ.க 9 அஸ்பெஸ்டர் சீமெந்திலான தட்டையான சீட்டுகள் தொடர்பிலான விபரக்கூற்று<br>பகுதி 1 தட்டையான சீட்டுகள் |
| 85 | 6905.10 | கூரைஓடுகள் | இ.க 2 களியிலான கூரைஓடுகள் தொடர்பிலான விபரக்கூற்று |
| 86 | 6907.21.10<br>6907.21.90<br>6907.22.10<br>6907.22.90<br>6907.23.10<br>6907.23.90<br>6907.30<br>6907.40 | செரமிக் ஓடுகளும் (ரைல்ஸ்)<br>போசிலன் ஓடுகளும் (ரைல்ஸ்) | இ.க 1181 செரமிக் ஓடுகள் தொடர்பிலான விபரக்கூற்று |
| 87 | 6911.10<br>6912.00.10 | போசிலின் மற்றும் செரமிக்கிலான மேசைப் பொருட்கள் | இ.க 1222 போசிலின் மற்றும் செரமிக்கிலான மேசைப் பொருட்கள் தொடர்பிலான விபரக்கூற்று |
| 88 | 7213.10.10<br>7213.10.90<br>7214.20.10<br>7214.20.90<br>7215.50 | கொங்றீட் அமைப்பிற்கு வலுவூட்டும் கிறைவரி அமைப்பிலான உருக்குத் துண்டுகள் | இ.க 375 கொங்றீட் அமைப்பிற்கு வலுவூட்டும் கிறைவரி அமைப்பிலான உருக்குத் துண்டுகள் தொடர்பிலான விபரக்கூற்று |

| தொடர் இல. | நிரல் *II* இ.மு குறியீடு | நிரல் *III* விபரம் | நிரல் *IV* இலங்கை கட்டளைகள் |
|---|---|---|---|
| 89 | 7213.91.10<br>7213.91.90<br>7213.99<br>7214.10.90<br>7214.91.10<br>7214.91.20<br>7214.99<br>7215.50<br>7215.90<br>7227.90 | *கொங்றீட் அமைப்பிற்கு வலுவூட்டும் வெறும் அமைப்பிலான உருக்குத் துண்டுகள்* | *இ.க 26 கொங்றீட் அமைப்பிற்கு வலுவூட்டும் வெறும் அமைப்பிலான உருக்குத் துண்டுகள் தொடர்பிலான விபரக்கூற்று* |
| 90 | 7213.91.10<br>7213.91.90<br>7213.99<br>7214.10.10<br>7214.10.90<br>7214.91.10<br>7214.91.20<br>7214.91.90<br>7214.99<br>7215.50<br>7227.90 | *அமைப்பிற்கும் பொதுப் பொறியியல் தேவைகளுக்குமான சூட்டுடன் உருக்கப்பட்ட உருக்குத் துண்டுகள்*<br>i) *வட்டத்துண்டுகள்*<br>ii) *சதுரத்துண்டுகள்*<br>iii) *தட்டைத்துண்டுகள்* | *இ.க 949 அமைப்பிற்கும் பொதுப் பொறியியல் தேவைகளுக்குமான சூட்டுடன் உருக்கப்பட்ட உருக்குத் துண்டுகள் தொடர்பிலான விபரக்கூற்று*<br><br>*பகுதி 1 வட்டத்துண்டுகள்*<br>*பகுதி 2 சதுரத்துண்டுகள்*<br>*பகுதி 5 தட்டைத்துண்டுகள்* |
| 91 | 7216.10<br>7216.21<br>7216.22<br>7216.31<br>7216.40<br>7216.50 | *சூட்டுடன் உருக்கப்பட்ட அமைப்புக்குரிய உருக்குப் பிரிவுகள்*<br>i) *யூ பிரிவுகள்*<br>ii) *எல் பிரிவுகள்*<br>iii) *ரி பிரிவுகள்* | *இ.க 907 சூட்டுடன் உருக்கப்பட்ட அமைப்புக்குரிய உருக்குப் பிரிவுகளின் பரிமாணங்களும் பிரிவுரீதியாக இயல்புகள் தொடர்பிலானவிபரக்கூற்று*<br>*பகுதி 3 யூ பிரிவுகள்*<br>*பகுதி 4 எல் பிரிவுகள்*<br>*பகுதி 5 ரி பிரிவுகள்* |
| 92 | 7217.10<br>7217.20.10<br>7217.20.20<br>7217.20.90 | *மென் உருக்குக் கம்பி* | *இ.க 139 பொது பொறியியல் தேவைக்கான மென் உருக்குக் கம்பி தொடர்பிலான விபரக்கூற்று* |
| 93 | 7217.20.20<br>7217.20.90 | *கம்பியாணிஉற்பத்திக்கான குளிர் வரைவுமென் உருக்குக் கம்பிகள்* | *இ.க 7 கம்பியாணி உற்பத்திக்கான குளிர் வரைவுமென் உருக்குக் கம்பிகள் தொடர்பிலான விபரக்கூற்று* |

| தொடர் இல. | நிரல் *II* இ.மு குறியீடு | நிரல் *III* விபரம் | நிரல் *IV* இலங்கை கட்டளைகள் |
|---|---|---|---|
| 94 | 7304.31.10<br>7304.31.90<br>7304.39.10<br>7304.39.90<br>7304.51.10<br>7304.51.90<br>7304.59.10<br>7304.59.90<br>7304.90.10<br>7304.90.90<br>7306.30<br>7306.90.90<br>7307.11<br>7307.19<br>7307.93<br>7307.99 | மின் முலாம் பூசப்பட்ட உருக்கிலான குழாய்கள் மற்றும் இணைப்புக்கள் (சொக்கட்) | இ.க 829 மின் முலாம் பூசப்பட்ட உருக்கிலான குழாய்கள் மற்றும் இணைப்புக்கள் (சொக்கட்) தொடர்பிலான விபரக்கூற்று |
| 95 | 7311.00 | திரவமாக்கப்பட்ட பெற்றோலிய வாயுக்களை (LPG) கொண்டு செல்லத்தக்க உருக்கிலானவாயு கொள்கலன்கள் | இ. க 1178 லீற்றர் 0.5 லீற்றர் தொடக்கம் லீற்றர் 150 வரையான நீர்க்கொள்ளளவைக் கொள்ளத்தக்க, திரவமாக்கப்பட்ட பெற்றோலிய வாயுக்களை கொண்டு செல்லத்தக்க உருக்கிலான வாயு கொள்கலன்கள் தொடர்பிலான விபரக்கூற்று<br><br>இ.க 1303 திரவமாக்கப்பட்ட பெற்றோலிய வாயுக்களை (LPG) கொண்டு செல்லத்தக்க மீள் நிரப்பதக்க,பொடிவைத்த இணைக்கப்பட்ட உருக்கிலான வாயுகொள்கலன்கள் தொடர்பிலான விபரக்கூற்று |
| 96 | 7314.20<br>7314.31<br>7314.39<br>7314.41<br>7314.42<br>7314.49 | சங்கிலி தொடர்களினால் இணைக்கப்பட்ட வேலி | இ.க 1148 நாகம் மற்றும் பிளாஸ்டிக்கினாலான முலாமிட்ட உருக்கினாலான சங்கிலி தொடர்களினால் இணைக்கப்பட்ட வேலி தொடர்பிலான விபரக்கூற்று |
| 97 | 7320.10 | மோட்டர் வண்டியினை நிறுத்தி வைப்பதற்கான வில்லுத்தகடுகள் | இ.க 639 மோட்டர்வண்டியினை நிறுத்தி வைப்பதற்கான வில்லுத்தகடுகள் தொடர்பிலான விபரக்கூற்று |
| 98 | 7408.11<br>7408.19 | காவலிடப்பட்ட வடங்களிலும் நாண்களுக்கான கடத்திகள் | இ.க 695 காவலிடப்பட்டவடங்களிலும் நாண்களுக்கானகடத்திகள் தொடர்பிலானவிபரக்கூற்று |
| 99 | 7615.10.90 | ஆக்கப்பட்ட அலுமினியப் பாத்திரங்கள் (அலுமினியத்திலான சாப்பாட்டு மேசைப் பொருட்கள் மற்றும் சமையலறை பொருட்கள்) | இ.க 69 ஆக்கப்பட்ட அலுமினியப் பாத்திரங்கள் (அலுமினியத்திலான சாப்பாட்டு மேசைப் பொருட்கள் மற்றும் சமயலறை பொருட்கள்) தொடர்பிலான விபரக்கூற்று |
| 100 | 8414.51 | மின்விசிறிகள் மற்றும் சீராக்கிகள் | இ.க 814 மின்விசிறிகள் மற்றும் சீராக்கிகள் தொடர்பிலான விபரக்கூற்று |

| தொடர் இல. | நிரல் *II* இ.மு குறியீடு | நிரல் *III* விபரம் | நிரல் *IV* இலங்கை கட்டளைகள் |
|---|---|---|---|
| 101 | 8481.10.10 | பெட்ரோலிய திரவஎரிவாயு சிலிண்டருக்கு பயன்படுத்தும் வால்வுகள் | இ.க 1184 பெட்ரோலிய திரவ எரிவாயு சிலிண்டருக்கு பயன்படுத்தும் வால்வுகள் தொடர்பிலான விபரக்கூற்று |
| 102 | 8481.10.20 | அழுத்த சீராக்கிகள் மற்றும் பெட்ரோலிய திரவ எரிவாயுக்கான தானியங்கி மாற்றும் சாதனம் | இ.க 1180 அழுத்தசீராக்கிகள் மற்றும் பெட்ரோலிய திரவ எரிவாயுக்கான தானியங்கி மாற்றும் சாதனம் தொடர்பிலான விபரக்கூற்று |
| 103 | 8504.10.10<br>8504.10.90 | குழாய் வடிவ புளொரசனட் விளக்குகளுக்கான சாரணைக்கற்கள் | இ.க 1150 குழாய் வடிவ புளொரசனட் விளக்குகளுக்கான சாரணைக்கற்கள் தொடர்பிலான விபரக்கூற்று |
| 104 | 8506.10.10<br>8506.10.90<br>8506.80 | முதன்மைக் கலங்கள் மற்றும் மின்கலங்கள் | இ.க 1198 முதன்மைக் கலங்கள் மற்றும் மின்கலங்கள் தொடர்பிலான விபரக்கூற்று |
| 105 | 8507.10.10<br>8507.10.90 | ஈய – அமிலதொடக்கமின்கலங்கள் | இ.க 1126 ஈய – அமில தொடக்க மின்கலங்கள் தொடர்பிலான விபரக்கூற்று |
| 106 | 8516.10 | நீரை சூடாக்குவதற்கான மின் அமிழ்தல் நீர்வெப்பமாக்கிகள் | இ.க 1193 நீரை சூடாக்குவதற்கான மின் அமிழ்தல் நீர்வெப்பமாக்கிகள் தொடர்பிலான விபரக்கூற்று |
| 107 | 8516.60.90 | மின்சார வெப்பத்தகடு | இ.க 1495 மின்சாரவெப்பத்தகடு,டோஸ்டர்ஸ் மற்றும் அதையொத்த சிறிய சமையல் உபகரணங்கள் தொடர்பிலான விபரக்கூற்று |
| 108 | 8516.79.20 | மின்சார கேத்தல் | இ.க 1501 திரவம் சூடேற்ற பயன்படும் வீட்டு உபகரணங்கள் மற்றும் அதையொத்த மின்சார உபகரணங்கள் தொடர்பிலான விபரக்கூற்று |
| 109 | 8536.20 | வீட்டினதும் அதைப் போன்ற பாவனைகளுக்கான பூரணமிக்க மிகைமின்னோட்டப் பாதுகாப்பிற்கான மின்சுற்று உடைப்புகள் (MCB) | இ.க 1175 வீட்டினதும் அதைப் போன்ற பாவனைகளுக்கான பூரணமிக்க மிகை மின்னோட்டப் பாதுகாப்பிற்கான மின்சுற்று உடைப்புகள் தொடர்பிலான விபரக்கூற்று |
| 110 | 8536.20 | வீட்டினதும் அதைப் போன்ற பாவனைகளுக்கான பூரணமில்லாத மிகைமின்னோட்டப் பாதுகாப்புடன் கூடிய எச்சமின்னோட்ட செயற்பாடுடைய மின்சுற்று, மின்சுற்று உடைப்புகள் (RCCB) | இ.க 1099 வீட்டினதும் அதைப் போன்ற பாவனைகளுக்கான பூரணமில்லாத மிகைமின்னோட்டப் பாதுகாப்புடன் கூடிய எச்ச மின்னோட்ட செயற்பாடுடைய மின்சுற்று, மின்சுற்று உடைப்புகள்தொடர்பிலானவிபரக்கூற்று |
| 111 | 8536.20 | வீட்டினதும் அதைப் போன்ற பாவனைகளுக்கான பூரணமிக்க மிகை மின்னோட்டப் பாதுகாப்புடன் கூடிய எச்சமின்னோட்ட செயற்பாடுடைய மின்சுற்று, மின்சுற்று உடைப்புகள் (RCBO) | இ.க 1022 வீட்டினதும் அதைப் போன்ற பாவனைகளுக்கான பூரணமிக்க மிகை மின்னோட்டப் பாதுகாப்புடன் கூடிய எச்ச மின்னோட்ட செயற்பாடுடைய மின்சுற்று,மின்சுற்று உடைப்புகள் தொடர்பிலானவிபரக்கூற்று |
| 112 | 8536.50.10 | குழாய் வடிவ புளொரசனட் விளக்குகளுக்கான ஒளிர்வு தொடக்கிகள் | இ.க 1260 குழாய் வடிவ புளொரசனட் விளக்குகளுக்கான ஒளிர்வு தொடக்கிகள் தொடர்பிலான விபரக்கூற்று |
| 113 | 8536.50.30<br>8536.50.90 | வீட்டினதும் அதைப் போன்ற நிலையான மின்சார நிறுவுகைகளுக்கான சுவிட்ச்சுகள் | இ.க 1000 வீட்டினதும் அதைப் போன்ற நிலையான மின்சார நிறுவுகைகளுக்கான சுவிட்ச்சுகள் தொடர்பிலான விபரக்கூற்று |

| தொடர் இல. | நிரல் II இ.மு குறியீடு | நிரல் III விபரம் | நிரல் IV இலங்கை கட்டளைகள் |
|---|---|---|---|
| 114 | 8536.61.90 | காவலிடப்பட்டபேயோ நெற் விளக்குப் பிடிகள் | இ.க 138 காவலிடப்பட்டபேயோ நெற் விளக்குப் பிடிகள் தொடர்பிலானவிபரக்கூற்று |
| 115 | 8536.69.21 | சர்வதேச மின் தொழினுட்ப ஆணைக்குழுவால் (IEC) வரையறுக்கப்பட்ட G வகை 13 அம்பியர்செருக்கிகள், தாங்கு குழி வெளிவழிகள், இலத்திரனியல் வாகனங்களுக்கு மின்னேற்ற பயன்படுத்தக்கூடிய தாங்குகுழிவெளி வழிகள், பல்வழிதாங்குகுழிவெளிவழிகள், பொருந்து கைகள், இணைப்பு அலகுகள் (ஆளியுடனானமற்றும் ஆளியற்ற), மாற்றக்கூடிய உருக்கற் செருகிகள் போன்றன. | இ.க 734 அம்பியர் 13 செருக்கிகள்,தாங்குகுழிவெளி வழிகள்,தாங்கு குழிவெளிவழிகளுடைய பொருந்துகைகள் மற்றும் இணைப்பு அலகுகள் தொடர்பிலான விபரக்கூற்று |
| 116 | 8539.22.20<br>8539.22.90 | தங்குதன் இழை பொருத்தப்பட்ட வீட்டுப்பாவனைக்கான விளக்குகள்,அதே போன்ற பொது ஒளியூட்டல் தேவைகள் | இ.க 984 தங்குதன் இழை பொருத்தப்பட்ட வீட்டுப்பாவனைக்கான விளக்குகள்,அதே போன்ற பொதுஒளியூட்டல் தேவைகள் தொடர்பிலான விபரக்கூற்று |
| 117 | 8539.31.10 | பொது வெளிச்சத்தினை வழங்கும் சேவைகளுக்கான செல்ப் - பலாஸ்டட் (பூரணமான வகையிலான ஒன்றிணைந்த புளொரசன்ட் விளக்குகள்) விளக்குகள் (CFL) | இ.க 1231 பொது வெளிச்சத்தினை வழங்கும் சேவைகளுக்கானசெல்ப் - பலாஸ்டட் (பூரணமான வகையிலான ஒன்றிணைந்த புளொரசன்ட் விளக்குகள்) விளக்குகள் தொடர்பிலானவிபரக்கூற்று |
| 118 | 8544.42.91 | (ஏக்ஸ்டென்ஷன் கோட்கள்) நீட்டக்கூடிய மின் வடங்கள் /எளிதில் எடுத்து செல்லக்கூடிய மின் குதை,மீண்டும் பயன்படுத்த கூடிய மற்றும் பயன்படுத்த முடியாத அம்பியர் 13G வகை வளையக்கூடிய வடங்கள் பொருத்தப்பட்ட குதைகள் | இ.க 734 அம்பியர் 13 செருகிகள்இ வெளி சொக்கட்டுகள் மற்றும் இணைப்பு அலகுகள் தொடர்பிலான விபரக்கூற்று |
| 119 | 8544.42.91<br>8544.49.20<br>8544.49.30 | சர்வதேசமின் தொழினுட்ப ஆணைக்குழுவால் (IEC) வரையறுக்கப்பட்ட G வகை 13 அம்பியர் செருகிகள், தாங்கு குழிவெளிவழிகளுடன் பொருந்தக் கூடிய இணைப்பான்களுடனான கம்பிவடச் சுருள்கள் | இ.க 1532 வீட்டுச்சூழல் மற்றும் அது போன்று நோக்கங்களுக்கான கம்பிவடச்சுருள்கள் தொடர்பிலான விபரக்கூற்று |
| 120 | 8544.49.10 | மோட்டர் வாகனங்களுக்கான வடங்கள் | இ.க 412 மோட்டர் வாகனங்களுக்கான வடங்கள் தொடர்பிலான விபரக்கூற்று 60எ மற்றும் 600V தனி கோர் 6 வடங்கள் |
| 121 | 8544.49.20<br>8544.49.30<br>8544.49.40<br>8544.49.90<br>8544.60 | பீவீசீ காவலிடப்பட்ட 600/1000 வோல்ட் மின்சார கம்பிகள் (கேபிள்கள்) | இ.க 987 பீவீசீ காவலிடப்பட்ட 600/1000 வோல்ட் மின்சார கம்பிகள் (கேபிள்கள்)தொடர்பிலான விபரக்கூற்று |
| 122 | 8544.49.20<br>8544.49.30<br>8544.49.90 | மின் சக்தி மற்றும் விளக்குகளுக்கான செப்பு கடத்தியுடனல்லாத கவச கம்பிகளால் (கேபிள் களால்) காவலிடப்பட்ட பீவீசீ | இ.க 733 பீவீசீ காவலிடப்பட்டதும் கவச மிடப்பட்டதுமான 300/500 வோல்ட் வரையிலான மின்சார கம்பிக்கள் தொடர்பிலான விபரக்கூற்று |

| தொடர் இல. | நிரல் *II* இ.மு குறியீடு | நிரல் *III* விபரம் | நிரல் *IV* இலங்கை கட்டளைகள் |
|---|---|---|---|
| 123 | 8544.49.20<br>8544.49.30<br>8544.49.90 | மின் சக்தி மற்றும் விளக்குகளுக்கான செப்பு கடத்தியுடனல்லாத கவச கம்பிகளால் (கேபிள்களால்) காவலிடப்பட்ட பீவீசீ மற்றும் வீடு, அலுவலகம் மற்றும் அது போன்றசுற்றுச் சூழலுக்கு கருவிகளுடனும், உத்தேசித்துள்ள சாதனங்களுடனான பாவனைக்கான பீவீசீ காவலிடப்பட்ட மின்சார வளையும் தன்மையுள்ள கம்பிகள் (கேபிள்கள்) | இ.க 1504 மின்சார கம்பிகள் , 450/750 வோல்ட் மின்னழுத்தம் வரை மதிப்பிடப்பட்ட குறைந்த மின்னழுத்த ஆற்றலுடைய கம்பிகள் தொடர்பிலான விபரக்கூற்று |
| 124 | 9603.21 | பற்தூரிகைகள் | இ.க 276 பற்தூரிகைகள் தொடர்பிலான விபரக்கூற்று |
| 125 | 9609.10.30<br>9609.90 | சாயம் தீட்டுக்கோல் மற்றும் பசைகள் | இ.க 777 சாயம் தீட்டுக்கோல் மற்றும் பசைகள் தொடர்பிலான விபரக்கூற்று |
| 126 | 9617.00.90 | வெற்றிடக் குடுவைகள் (சுடுநீர் போத்தல்கள்) | இ.க 397 வெற்றிடப் பொருள்களும் காவலிடப்பட்ட குடவைகள், சாடிகள் மற்றும் கூசாக்கள் தொடர்பிலான விபரக்கூற்று |
| 127 | 9619.00.10 | சுகாதாரத் துவாய்கள் | இ.க1732 ஒரு தடவை பயன்படுத்தக்கூடிய சுகாதாரத் துவாய்கள்<br>இ.க 1749 ஒரு தடவை பயன்படுத்தக்கூடிய மிகவும் தடிப்பமான/மெல்லிய சுகாதாரத் துவாய்கள் தொடர்பிலான விபரக்கூற்று |

**அட்டவணை I (ஆ)**

| தொடர் இல. | நிரல் *II* இ.மு குறியீடு | நிரல் *III* விபரம் | நிரல் *IV* இலங்கை கட்டளைகள் |
|---|---|---|---|
| 128 | 0713.40.11 | முழு சிவப்பு பருப்புகள் | இ.க 1573 முழு சிவப்பு பருப்புகளுக்கான விபரக் கூற்று |
| 129 | 0904.21.10<br>0904.22.10 | மிளகாய், தூளாக்கப்படாத மற்றும் அரைக்கப்படாத | இ.க 1563 தூளாக்கப்படாத மற்றும் அரைக்கப்படாத மிளகாய் தொடர்பிலான விபரக்கூற்று |
| 130 | 0909.21<br>0909.22 | கொத்தமல்லி, தூளாக்கப்படாத மற்றும் அரைக்கப்படாத | இ.க 1565 தூளாக்கப்படாத மற்றும் அரைக்கப்படாத கொத்தமல்லி தொடர்பிலான விபரக்கூற்று |
| 131 | 1517.10.30<br>1517.10.90<br>1517.90 | மாஜரின் ,கொழுப்பு பரப்பப்பட்டவை மற்றும் கலக்கப்பட்ட கொழுப்பு பரப்பப்பட்டவை. வெதுப்பக கொழுப்பு பண்டங்கள் | இ.க 1102 வெதுப்பக கொழுப்பு பண்டங்களுக்கான விபரக்கூற்று |
| 132 | 2523.29.20<br>2523.29.30 | சாதாரண போட்லண்ட் சீமெந்து | இ.க 1697 சாதாரண போட்லண்ட் சீமெந்திற்கான விபரக்கூற்று |
| 133 | 3303.00.22<br>3303.00.29 | கொலோன் | இ.க 1619 கொலோன்களுக்கான விபரக்கூற்று |
| 134 | 3304.10 | உதட்டுச்சாயம் | இ.க 1464 உதட்டுச் சாயத்திற்கான விபரக்கூற்று |

| தொடர் இல. | நிரல் *II* இ.மு குறியீடு | நிரல் *III* விபரம் | நிரல் *IV* இலங்கை கட்டளைகள் |
|---|---|---|---|
| 135 | 3304.91 | சருமபவுடர் | இ.க 389 சருமபவுடர் தொடர்பிலான விபரக்கூற்று |
| 136 | 3304.99 | குழந்தைங்களுக்கான சருமகிரீம் மற்றும் லோஷன் | இ.க 742 குழந்தைங்களுக்கான சருமகிரீம் மற்றும் லோஷன் தொடர்பிலான விபரக்கூற்று |
| 137 | 3304.99 | சருமகிரீம் மற்றும் லோஷன் | இ.க 743 சரும கிரீம் மற்றும் லோஷன் தொடர்பிலான விபரக்கூற்று |
| 138 | 3304.99 | குழந்தைகளுக்கான எண்ணெய் | இ.க 1191 குழந்தைகளுக்கான எண்ணெய் தொடர்பிலான விபரக்கூற்று |
| 139 | 3305.10 | குழந்தைகளின் முடிக்கான ஷம்பு | இ.க 1342 குழந்தைகளின் முடிக்கான ஷம்பு தொடர்பிலான விபரக்கூற்று |
| 140 | 3305.10 | பெரியவர்களின் முடிக்கான ஷம்பு | இ.க 1346 முடிக்கான ஷம்பு தொடர்பிலான விபரக்கூற்று |
| 141 | 3305.90 | முடிக்கானகிரீம் | இ.க 611 பெரியவர்களின் முடிக்கான கிரீம் தொடர்பிலான விபரக் கூற்று |
| 142 | 3305.90 | முடிக்கான எண்ணெய் | இ.க 1341 முடிக்கான எண்ணெய் தொடர்பிலான விபரக்கூற்று |
| 143 | 3305.90 | திரவ ஜெல் மற்றும் ஆக்ஸிஜனேற்றப்பட்ட தலைமுடிக்கான நிறகிரீம் | இ.க 1439 திரவ ஜெல் மற்றும் ஆக்ஸிஜனேற்றப் பட்ட தலைமுடிக்கான நிறகிரீம் தொடர்பிலான விபரக்கூற்று |
| 144 | 3305.90 | தலைமுடிக்கான நிறத்தூள் | இ.க 1440 தலைமுடிக்கான நிறத்தூள் தொடர் பிலான விபரக்கூற்று |
| 145 | 3307.10 | சவரக் கிரீம் | இ.க 796 சவரக் குழைவு தொடர்பிலான விபரக்கூற்று |
| 146 | 3401.11.30<br>3401.11.90 | சவர சவர்க்காரம் | இ.க 36 சவர சவர்க்காரம் தொடர்பிலான விபரக்கூற்று |
| 147 | 3401.11.30<br>3401.11.90 | மென்மையான சவர்க்காரம் | இ.க 37 மென்மையான சவர்க்காரம் தொடர்பிலான விபரக்கூற்று |
| 148 | 3401.19.30<br>3401.19.90 | கார்போலிக் சவர்க்காரம் | இ.க 35 கார்போலிக் சவர்க்காரம் தொடர்பிலான விபரக்கூற்று |
| 149 | 3401.20.90 | திரவ நிலை சவர்க்காரம் | இ.க 1142 திரவநிலை சவர்க்காரம் தொடர்பிலான விபரக்கூற்று |
| 150 | 3401.20.90 | உள்நாட்டு மற்றும் தொழில்த்துறை நோக்கத்திற்கான திரவநிலை சவர்க்காரம் | இ.க 1390 உள்நாட்டு மற்றும் தொழில்த்துறை நோக்கத்திற்கான திரவநிலை சவர்க்காரம் தொடர்பிலான விபரக்கூற்று |
| 151 | 3924.90.90 | பொலிமரினால் தயாரிக்கப்பட்ட பாலுட்டும் போத்தல்கள் | இ.க 1306 பொலிமரினால் தயாரிக்கப்பட்ட பாலுட்டும் போத்தல்கள் தொடர்பிலான விபரக்கூற்று |
| 152 | 3924.90.90 | குடிக்கக் கூடியதிரவங்களை எடுத்துச் செல்ல மீண்டும் பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் போத்தல்கள் | இ.க 1616 குடிக்கக் கூடிய திரவங்களை எடுத்துச் செல்ல மீண்டும் பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் போத்தல்கள் தொடர்பிலான விபரக்கூற்று |

| தொடர் இல. | நிரல் *II* இ.மு குறியீடு | நிரல் *III* விபரம் | நிரல் *IV* இலங்கை கட்டளைகள் |
|---|---|---|---|
| 153 | 7321.11 | திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய வாயுவுடன் பயன் படுத்தக்கூடிய உள் நாட்டு குறைந்த அழுத்த எரிவாயு அடுப்புகள் | இ.க 451 திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய வாயுவுடன் பயன்படுத்தக்கூடிய உள் நாட்டு குறைந்த அழுத்த எரிவாயு அடுப்புகள் தொடர்பிலான விபரக்கூற்று |
| 154 | 8507.10.10<br>8507.10.90 | மோட்டார்சைக்கிள்கள் மற்றும் ஒத்தஈய – அமில தொடக்க மின்கலங்கள் | இ.க 1235 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஒத்த ஈய – அமில தொடக்க மின்கலங்கள் தொடர்பிலான விபரக்கூற்று |
| 155 | 8516.40 | வீட்டுப்பாவனைக்கான மற்றும் அதையொத்த பாவனைக்கான மின்னமுத்தி | இ.க 1476 வீட்டுப்பாவனைக்கான மற்றும் அதையொத்த பாவனைக்கான மின்னமுத்தி தொடர்பிலான விபரக்கூற்று |
| 156 | 8516.60.10 | மின்சாரஉபகரணங்கள் (ரைஸ் குக்கர்கள்) | இ.க 1501 திரவம் சூடேற்ற பயன்படும் வீட்டு உபகரணங்கள் மற்றும் அதையொத்த மின்சார உபகரணங்கள் தொடர்பிலான விபரக்கூற்று – (ரைஸ் குக்கர்கள்) |
| 157 | 8536.20 | வீட்டுப்பாவனை மற்றும் அதை போன்றவற்றிற் கான“பி”மற்றும் “எப்”வகை ஆர்.சி.சி.பி | இ.க 1431 வீட்டுப்பாவனை மற்றும் அதை போன்றவற்றிற்கான “பி” மற்றும் “எப்” வகை ஆர்.சி.சி.பி தொடர்பிலான விபரக்கூற்று |
| 158 | 8536.61.90 | எடிசன் திருகுவகை விளக்கு பிடிச்சட்டங்கள் | இ.க 1571 எடிசன் திருகுவகை விளக்கு பிடிச்சட்டங்கள் தொடர்பிலான விபரக்கூற்று |
| 159 | 8539.52 | பொது ஒளியூட்டு சேவைக்கான எல்.ஈ.டீ விளக்குகள் | இ.க 1458 பொது ஒளியூட்டு சேவைக்கான எல்.ஈ.டீ விளக்குகள் தொடர்பிலான விபரக்கூற்று |
| 160 | 8544.20.10 | தொலைக்காட்சி சமிக்ஞைக்கான ரேடியோ அதிர் வெண் வடங்கள் | இ.க 1513 தொலைக்காட்சி சமிக்ஞைக்கான ரேடியோ அதிர்வெண் வடங்கள் தொடர்பிலான விபரக்கூற்று |
| 161 | 9503.00.10<br>9503.00.20<br>9503.00.30<br>9503.00.40<br>9503.00.50<br>9503.00.60<br>9503.00.70<br>9503.00.80<br>9503.00.90 | விளையாட்டுப் பொருட்கள் | இ.க 8124 பகுதி 3 தொலைக் காட்சி சமிக்ஞைக்கான ரேடியோ அதிர்வெண் வடங்கள் தொடர்பிலான விபரக்கூற்று |

EOG 05-0174

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.